முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 787**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

24.11.2021, புதன்கிழமை

1. பிரம்ம சூட்சுமம் அறிந்த அரசனே
பிரணவ சித்தி கண்ட குருராஜனே
வரம்பெற்று ஆறுமுகன் என் சக்தியாக
வாழுகின்ற வள்ளலே ஞானதேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
ஆசி தந்து ஞானியர்கள் உந்தனுக்குள்
ஆற்றலாக இனைந்து உலகை காத்துவர
3. வருகின்ற அரங்கன் உன் தர்மமே
வையகத்தை மீட்டு வழிநடத்தும்
தருகின்ற அரங்கன் உன் உபதேசமே
தரணியோர்க்கு ஞானமாக துணைவரும்
4. வருகவே அரங்கன் தொடர்புகூட்டி
வையகத்தார் தொடர்ந்து ஞானவழி வர
வருமுலகில் கலியுகத்தின் துன்பங்கள் அனைத்தும்
வழுத்திடுவேன் அகன்றோடி இனிதே
5. இனிதே அரங்கன் வழிகாட்டலில்
இந்த உலகமே பாதுகாப்பும் வளமும் பெறும்
தர்மத்தை கூட்டி அரங்கன் உலகோர்க்கு
தயவை காட்டி அருள் புரிந்துவர
6. வருகின்ற அரங்கன் மார்க்கமே
வையகத்தார்க்கு அழியாமை தந்து பேரருள்புரியும்
பெருமைபட அரங்கனுக்கு ஆறுமுகன் யானும்
பிரம்மவேளையில் அனுதினமும் மகா சூட்சுமம்
7. சூட்சுமத்தை தொடர்ந்து வழங்கிவர
வருகின்ற அரங்கன் அருளாசி பெற்ற மக்கள் மூலமே வையகம் தர்மலோகமாகி
ஆகியே அரங்கன் வேண்டலாக அழியாமை பெற்று வருபவரெல்லாம்
அகிலத்தில் ஞான ஆட்சி அமைக்கக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–